Dinathanthi - 22.04.2023



அவினாசிலிங்கம் கல்லூரியின் துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்கிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி சேர்மன் டாக்டர் எல்.பி.தங்கவேலு உள்பட பலர் உள்ளனர்.

**பி.பி.ஜி. கலை, அறிவியல் கல்லூரியில்**

# முதலாம் ஆண்டு பட்டமளிப்பு விழா

சரவணம்பட்டி, ஏப்.22–

கோவை சரவணம்பட்டியில் உள்ள பி.பி.ஜி. கலை, அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி சேர்மன் டாக்டர் எல்.பி.தங்கவேலு தலைமை தாங்கினார். கல்லூரி அறங்காவலர் அக் ஷய் தங்கவேல் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முத்துமணி வரவேற்று ஆண்டறிக்கையை வழங்கினார். நிகழ்ச்சியில், கோவை அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரியின் துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 176 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பேசினார்.

முன்னதாக கல்லூரி சேர்மன் டாக்டர் எல்.பி.தங்கவேலு பேசும் போது, நான் கல்லூரியில் 3–ம் ஆண்டு படிக்கும்போது என்னுடைய தந்தை இறந்துவிட்டார். அவரது நினைவாக ஏழை மாணவர்கள் படிக்கும் வகையில் பெரிச்சி கவுண்டர் பெயரில் கல்வி நிறுவனங்களையும், புற்றுநோய் மருத்துவமனையும் உருவாக்கி எனது தந்தைக்கு பெருமை சேர்த்துள்ளேன். இந்த கல்வி நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் படித்து பட்டம் பெற்று செல்வதை அவர்களது பெற்றோர்கள் பார்த்து பெருமை அடைவது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஜெயபால கிருஷ்ணன், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள், பெற்றோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.